**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1245/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விஜயகுமார் | Prosecution | DW1 Chief and cross |
| Father Name | ராஜேந்திரன் | Defence | |
| Village | வெள்ளக்குளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 26/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>02.09.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. <u>1 ம் எதிரி ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.</u>**

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரில் வசித்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். கடந்த 14.07.2022 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் நான் கடலுக்கு மீன் பிடித்துவிட்டு வீட்றிற்கு வந்து கொண்டிருந்த போது அங்கு கோயில் அருகில் உட்கார்ந்திருந்த முருகன், வீரமணி, அய்யப்பன் ஆகிய மூவரும் என்னை பார்த்து குச்சிக்காரி மகன், தேவியா மகனே என்றெல்லாம் திட்டி, லைட் கட்டி இருந்த கம்பால் மூவரும் இடுப்பிலும், வயிரிலும், முதுகிலும், அடித்ததில் வலது பக்க இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது. எனது அண்ணன் ரகுபதி கேள்வி பட்டு என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி GHயில் சேர்த்தார். எதிரிகள் என்னை என்னக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.

2. நான் சீர்காழி GHயில் சிகிச்சையில் இருந்த போது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் இருந்து முருகவேல் என்னும் போலிசார் எ்ன்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கி சென்றார்கள். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் இ்ட்டேன். மேற்படி நபர் கள் அடித்ததால் நாளது தேதி வரை என்னால் சரியாக வேலைக்கு சென்று குனிந்து நிமிர்ந்து வேலை செய்ய முடியவில்லை. அதிக நிற்கவும் முடியவில்லை. நான் கொடுத்த

வாக்குமூலத்தின் அடிப்படையில் புதுப்பட்டினம் காவல் துறையினர் குற்ற எண்.123/2022 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. **அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை (online copy) எசா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. சீர்காழி அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்ட **18.07.2022 தேதி யிட்ட Discharge summary அரசு தரப்பு ஆட்சேபனையுடன் எசாஆ.2 ஆக குறியீடு செ**ய்யப்படுகிறது. என் மீதும் எனது அண்ணன், அப்பா இருவர் மீதும் முருகன் என்பவர் கொடுத்த வழக்கு பொய்வழக்கு என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2022 ம் வருடம் ஜீலை மாதம் நடந்த கோயில் திருவிழாவின் போது பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் என்னை ரவுடி என சித்திரித்து பேனர் வைத்தேன் என்றால் சரியல்ல. அப்படி வைக்கப்பட்ட பேனரை யாரோ சிலர் கிழித்ததால்அசா.1 முருகன் தான் கிழித்தார் என்று தகறாறு செய்தேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில்நான் மீன் பிடிக்க கடலுக்கு சென்றேன். நானும் எனது அப்பாவும் அண்ணனும் சேர்ந்து கொண்டு அசா.1 யை கட்டையால் தாக்கினோம் என்றால் சரியல்ல. நான் அசா.1 யை தகாத வார்த்தையால் திட்டி அடித்து காயம் ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது போன்று எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. அசா.1 என் மீதும் எனது அப்பா மீதும் கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை**